


17.06.2024

தலைப்புச் செய்திகள்

1.விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கான வேளாண் நிதி உதவி திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் கோடி ரூபாயை பிரதமர் திரு. நரேந்திரமோடி நாளை விடுவிக்கிறார்.

2. இந்தியா – அமெரிக்கா இடையிலான ஒத்துழைப்பு வரும் காலங்களில் மேலும் வலுப்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

3. தியாகத்திருநாளாம் பக்ரீத் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

4. தமிழகம் பால் உற்பத்தியில் புதிய சாதனை படைத்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. கோஷியாங் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் தைவானில் நாளை தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

ழுழுழுழுழுழுழுழுழுழு

பிரதமர் கிஸான் சம்மான்

பிரதமர் திரு. நரேந்திரமோடி விவசாயிகளுக்கான வேளாண் நிதி உதவி திட்டமான, கிஸான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ் 17ஆவது தவணையாக 20 ஆயிரம் கோடி ரூபாயை நாளை விடுவிக்கிறார்.

9 கோடியே 3 லட்சம் விவசாயிகளின் வங்கி கணக்குகளில் இந்த தொகை செலுத்தப்பட உள்ளது.

உத்திரபிரதேச மாநிலம் வாரணாசியில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் அனைத்து மாநில முதலமைச்சர்களும் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுய உதவிக்குழுவை சேர்ந்த மகளிருக்கு கிரிஷி சகி சான்றிதழ்களையும் பிரதமர் இந்நிகழ்ச்சியின் போது வழங்க உள்ளார்.

தொடர்ந்து நாளை மறுநாள் பீகார் மாநிலம் செல்லும் பிரதமர் நாளந்தா பல்கலைகழகத்தின் புதிய வளாகத்தை திறந்து வைக்கிறார்.

இதனிடையே சர்வதேச யோகா தினம் வரும் 21ஆம் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு மூட்டு மற்றும் வயிற்றுப்பகுதிக்கு ஆரோக்கியத்தை வழங்கும் பத்ராசனம் குறித்த காணொலியை பிரதமர் சமூக வலைதளத்தில் பகிர்ந்துகொண்டுள்ளார்.

மூமூமூமூமூமூமூமூமூமூ

மன்-கீ-பாத்

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கீ பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 111ஆவது முறையாக வரும் 30ஆம் தேதி உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் அலபழஎ இணையதளம், நமோசெயலி, 18 00 11 7800 என்ற இலவச தொலைபேசி எண் ஆகியவற்றில் தங்கள் கருத்துக்களை வரும் 28-ம் தேதிவரை அனுப்பலாம்.

மூமூமூமூமூமூமூமூமூமூ

இந்தியா அமெரிக்கா கூட்டம்

இந்தியா – அமெரிக்கா இடையே பல்வேறு துறைகளிலான ஒத்துழைப்பு வரும் காலங்களில் மேம்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலீவனுடன் புதுதில்லியில் இன்று ஆலோசனை மேற்கொண்ட பின் அமைச்சர் வெளியிட்டுள்ள சமூக

வலைதள பதிவில் இருதரப்பு, பிராந்திய, உலகளாவிய விஷயங்கள் குறித்து இருவரும் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான முக்கிய, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மீதான முன் முயற்சியின் 2ஆவது கூட்டத்தில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித்தோவலுடன் ஜேக்சலீவன் புதுதில்லியில் ஆய்வு மேற்கொள்கிறார்.

நாளை இத்திட்டத்தின் கீழ் தொழில்துறை முதன்மை செயல் அதிகாரிகளிடையே இருவரும் உரையாற்ற உள்ளனர்.

தொடர்ந்து பிரதமர் திரு.நரேந்திரமோடியையும் சலீவன் சந்தித்து ஆலோசிக்க உள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ரயில் விபத்து

மேற்குவங்க மாநிலம் டார்ஜிலிங் மாவட்டம் நியூ ஜல்பைகுரி ரயில் நிலையம் அருகே இன்றுகாலை இரு ரயில்கள் மோதிய விபத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

50 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்த கஞ்சன் ஜங்கா பயணியர் விரைவு ரயில் மீது – சரக்கு ரயில் மோதியதில் பயணியர் ரயிலின் இரண்டு பெட்டிகள் தடம் புரண்டன.

சம்பவ இடத்திற்கு விரைந்துள்ள ரயில்வே துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணப் மீட்பு பணிகளில் தேசிய மாநில பேரிடர் மீட்பு குழுவினர் ஈடுபட்டு வருவதாகவும், இப்பணிகள் போர்கால அடிப்படையில் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இவ்விபத்து குறித்த தகவல்கள் பெற பொதுமக்களுக்கான உதவி எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத்துணைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தமக்கு மிகுந்த கவலை அளிப்பதாகவும், அங்குள்ள நிலைமை குறித்து அதிகாரிகளுடன் தாம் பேசியதாகவும் பிரதமர் தமது சமூகவலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 2 லட்ச ரூபாயும்,

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்க பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

ரயில்வே துறை சார்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 லட்ச ரூபாயும்,

பலத்த காயமடைந்தவர்களுக்கு இரண்டரை லட்சம் ரூபாயும்,

லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

அமித்ஷா

மணிப்பூர் மாநிலத்தின் பாதுகாப்பு நிலைமை குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா புதுதில்லியில் இன்றுமாலை உயர்மட்ட ஆலோசனை மேற்கொள்கிறார்.

மத்திய மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள், ராணுவ பாதுகாப்பு படை அதிகாரிகள் உள்ளிட்டோர் இக்கூட்டத்தில் பங்கேற்க உள்ளனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ஜவுளி ஏற்றுமதி

நாட்டின் ஜவுளி ஏற்றுமதி கடந்த மே மாதத்தில் 9.59 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இந்திய ஜவுளி தொழில் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இதேகால கட்டத்தில் நாட்டின் ஆடை ஏற்றுமதியும் 9.84 சதவிகித வளர்ச்சி கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த ஏற்றுமதி கடந்த ஆண்டு மே மாதத்தை விட 9.7 சதவிகிதம் வளர்ச்சி கண்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

அக்னிபாத்

அக்னிபாத் திட்டம் சைனிக் சமன் திட்டம் என மீண்டும் தொடங்கப்பட்டதாக கூறப்படும் வாட்ஸ் அப் செய்தி போலியானது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பல மாற்றங்களுடன் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக வரும் செய்திகள் தவறானவை என்றும், இதுகுறித்த எந்த முடிவும் மத்திய அரசு எடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

பக்ரீத்

தியாகத் திருநாளாம் பக்ரீத் பண்டிகை, இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு,

குடியரசு துணைத்தலைவர் திரு.ஜக்தீப் தன்கர்,

பிரதமர் திரு.நரேந்திரமோடி,

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், உள்ளிட்ட தலைவர்கள் இஸ்லாமியர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் சமூகத்தில் நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் மகிழ்ச்சியையும் இவ்விழா கொண்டுவரட்டும் என வாழ்த்தியுள்ளார்.

தலைநகர் டெல்லியில் ஜூமா மசூதி, ஃபதேபூர் மசூதி உட்பட நாடுமுழுவதும் உள்ள பள்ளிவாசல்களில் சிறப்பு தொழுகைகள் அதிகாலை முதலே நடைபெற்றன.

உலக பிரசித்தி பெற்ற நாகூர் தர்காவில் இன்று நடைபெற்ற சிறப்பு தொழுகையில் ஏராளமானோர் பங்கேற்றதோடு குர்பானி தானமும் வழங்கினர்.

தென்காசி கடையநல்லூரில் நடைபெற்ற சிறப்பு தொழுகை குறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

திருச்சி, மதுரை, நெல்லை, வேலூர், திருவண்ணாமலை, மயிலாடுதுறை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சிறப்பு தொழுகைகள் நடைபெற்றன

ழுழுழுழுழுழுழுழுழுழு

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் லண்டனில் பயிற்சி பெற்று திரும்பிய மாணாக்கருடன் சென்னையில் இன்று கலந்துரையாடுகிறார்.

இத்திட்டத்தின் கீழ் 25 மாணாக்கர் பயிற்சி பெற்று தமிழகம் திரும்பியுள்ளனர்.

இதனிடையே சிவகங்கை மாவட்டம் கீழடியில் 10-வது கட்ட அகழாய்வு பணிகளை முதலமைச்சர் காணொலி வாயிலாக நாளை தொடங்கி வைக்கிறார்.

இந்நிலையில் ராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலிருந்து மீன்பிடிக்க சென்று கடலில் மூழ்கி உயிரிழந்த 3 பேரின் குடும்பத்தினருக்கும்,

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வெள்ளங்குழி தனியார் பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்ச ரூபாய் வழங்க முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று உத்தரவிட்டுள்ளார்.

இதனிடையே குவைத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்த தூத்துக்குடியை சேர்ந்த தொழிலாளியின் குடும்பத்திற்கு தமிழக அரசின் சார்பில் 5 லட்ச ரூபாய்க்கான காசோலை இன்று வழங்கப்பட்டது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ஆவின்

தமிழகம் பால் உற்பத்தியில் புதிய சாதனை படைத்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாநில பால்வளத்துறை இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் 10.1 மில்லியன் டன் பால் உற்பத்தி செய்து நாட்டிலேயே வாடிக்கையாளர்களுக்கு அட்டைகள் மூலம் பால் விநியோகித்து பொதுமக்களின் நம்பிக்கையை பெற்ற நிறுவனமாக ஆவின் திகழ்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளில் பால்வளத்துறையை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், 40 நாட்கள் வரை கெட்டுப்போகாமல் இருக்கும் பதப்படுத்தப்பட்ட பால் விற்பனை தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆவின் நிறுவனத்தில் 58 பேருக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2021 – 22-ஆம் ஆண்டு ஆவின் நிறுவனத்தின் பால் மற்றும் பால் பொருட்கள் 590 கோடி ரூபாய்க்கு மின்னணு பரிவர்த்தனை மேற்கொண்டதற்காக தேசிய அளவில் 2ஆம் இடத்திற்கான விருது கிடைக்கப்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

ராமதாஸ்

காவிரியாற்றின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டும் முயற்சியில் மத்திய அரசு நடுநிலையுடன் செயல்பட வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்விஷயம் தொடர்பாக பேச்சுவார்த்தை மேற்கொள்ள மத்திய அரசிடமிருந்து அழைப்பு வந்தால் தமிழக அரசு அதை ஏற்க கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே மேகதாதுவில் அணை கட்டும் முயற்சியை கர்நாடக அரசு கைவிட வேண்டும் என்று கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் தஞ்சை தலைமை தபால் நிலையம் முன்பு இன்று ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளுக்கான பிரதமரின் கிஸான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ் 17ஆவது தவணை தொகை வரவு வைப்பதற்காக தபால் நிலையங்களில் சிறப்பு முகாம் நாளைமுதல் இம்மாத இறுதிவரை நடத்தப்படும் என்று அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திரு.மாரியப்பன் தெரிவித்துள்ளார்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு முடித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு ஜவுளித்துறையில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரவன் குமார் தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருந்த கால கட்டத்தில் நேரிட்ட பட்டாசு விபத்துகளில் உயிரிழந்தவர்களுக்கு அறிவிக்கப்பட்ட நிவாரண தொகைகள் நாளை வழங்கப்படும் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கோவில்

விருதுநகர் மாவட்டம் சிவகாசியை அடுத்த திருத்தங்கல் ஸ்ரீநின்ற நாராயண பெருமாள் திருக்கோவில் ஆனி பிரம்மோற்சவ திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதுகுறித்து எமது செய்தியாளர்

வாய்ஸ்

ழுழுழுழுழுழுழுழுழுழு

பேட்மிண்டன்

கோஷியாங் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டிகள் தைவானில் நாளை தொடங்குகின்றன.

இந்தியா சார்பில் ஆடவர் பிரிவில் சமீர் வர்மா, மஞ்சுநாத், ரகு மாரிசாமி உள்ளிட்டோரும்,

மகளிர் பிரிவில் அனுபமா உபாத்யாயா, ரக்ஷிதா ஸ்ரீ, தேவிகா, உள்ளிட்டோரும் இப்போட்டிகளில் களமிறங்குகின்றனர்.

ழுழுழுழுழுழுழுழுழுழு

கிரிக்கெட்

ஐ.சி.சி உலக கோப்பை 20-20 கிரிக்கெட் சூப்பர் 8 சுற்றுகள் நாளை மறுநாள் தொடங்குகின்றன.

இந்தியா தனது முதல் போட்டியில் பார்படாசில் வரும் 20-ஆம் தேதி ஆப்கானிஸ்தானை எதிர்கொள்கிறது.

குரூப் 1-இல் இந்தியா ஆஸ்திரேலியா ஆப்கானிஸ்தான் பங்களாதேஷ் அணிகளும்,

குரூப் 2-இல் தென்னாப்பிரிக்கா வெஸ்ட் இண்டிஸ் அமெரிக்கா இங்கிலாந்து அணிகளும் இடம்பெற்றுள்ளன.

ழுழுழுழுழுழுழுழுழுழு

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

ழுழுழுழுழுழுழுழுழுழு